DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 42 /2017

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Anthi | Father/Husband Name: Saminathan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.06.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது நரசிங்கம்பட்டியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 08 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை சுமார் 07 மணியளவில் நான் வீட்டில் வாசல் தெளித்துக்கொண்டிருந்தேன். எதிரி முத்துக்குமார் என்னை தேவடியா என்று அசிங்கமாக பேசி மற்ற எதிரிகளோடு சேர்ந்து சேலை பிடித்து இழுத்து கீழே போட்டு 3 பேரும் அடித்தார்கள். எனது கணவர் இறந்துவிட்டார். அப்போது அருகிலிருந்த சின்னப்பொன்னு மற்றவர்கள் விலக்கிவிட்டு என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று அன்று 4 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சாட்சி அழகம்மாள் எனது தாயார். சாட்சி சின்னப்பொன்னு எனது மச்சான் மனைவி. சாட்சி மதுரைச்சாமி பக்கத்து வீட்டுக்காரர், எனக்கு அண்ணன் உறவுமுறை. எனது வீட்டிற்கு அருகில் தீரன், ஆறுமுகம், சோமகிரி, பாண்டி, சொக்கர் ஆகியோர்கள் வீடு உள்ளது. காலையில் முதன் முதலில் முத்துக்குமார்என்னை அசிங்கமாக பேசினார். எதிரி முத்துக்குமார் காலையில் தண்ணீர் பாய்ச்ச சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அவர் என்னை அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு கால் மணி நேரத்தில்

வந்துவிடலாம். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் மருத்துவமனைக்கு போய்விட்டு வந்ததால் காவல் நிலையம் செல்ல காலதாமதமாகிவிட்டது. இதை போலீசாரிடம் சொன்னேன். போலீசார் மருத்துவமனைக்கு போகச்சொல்லி ரசீது எதுவும் தரவில்லை. புகாரை ஏட்டையா எழுதினார். நான் சொல்லசொல்ல அவர் எழுதினார். புகார்கொடுத்த பிறகு போலீசார் விசாரிக்க வரவில்லை. எதிரிகளுக்கும் எங்களுக்கும் எனது வீட்டிற்கு முன்பாக சாக்கடை தண்ணீர் போவது சம்மந்தமாக பிரச்சனை உள்ளது. அது சம்மந்தமாக பஞ்சாயத்து அலுவலகத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. சம்பவம் நடக்கும்போது வேறு யாருக்கும் தெரியாது. சின்னப்பொன்னு விலக்கிவிட்டார். நான் மயக்கமாகிவிட்டதால் வேறு யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும் எனக்கும் ஏற்கனவே முன்விரோதம் உள்ளதால் எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்னத்துடன் புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பின்யோசனை செய்து ஜோடித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 42 /2017

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | :Mathuraichami | Father/Husband Name: Manthayan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.06.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது நரசிங்கம்பட்டியில் வசிக்கிறேன். பெயின்டிங்வேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் இந்த சாடசியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைபரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலிசார் விசாரணையில் கடந்த 08.02.13ம் தேதி காலை 07 மணிக்கு அ.சா.1ஐ அவரது வீட்டின் வாசலில் தண்ணீர் தெளித்துக்கொண்டிருந்தபோது 1-வது எதிரி அவரை அசிங்கமாக பேசி தலைமுடியைப்பிடித்து கீழே இழுத்துப்போட்டு சேலை உருவி அசிங்கப்படுத்தியதாகவும், மற்ற 2 எதிரிகளும் கீழே கிடந்த அ.சா.1ஐ காலால் மிதித்து ஊமைக்காயப்படுத்தியதாகவும் அதை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டக்கொண்டதால் அவர்களுகககு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 42 /2017

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | :Chinnaponnu | Father/Husband Name: Veeran | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.06.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது நரசிங்கம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ எனது பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 08 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 07 மணியளவில் சத்தம்கேட்டு அ.சா.1-ன் வீட்டிற்கு சென்று பார்த்தேன். அ.சா.1 கீழே கிடந்தார் எதிரிகள் 3பேரும் அடித்துக்கொண்டிருந்தார்கள். நானும், மதுரைச்சாமி மற்றும் முருகன் ஆகியோர்கள் விலக்கிவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

அந்தி எனக்கு கொளுந்தன் மனைவி. சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்றேன். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரிக்கும் எங்களுக்கும் ஏற்கனவே பிரச்சனை உள்ளது. எற்கனவே எங்களை 3 நபர்கள் சேர்ந்து அடித்துவிட்டார்கள். இந்த வழக்கு சம்பவத்திற்கு பிறகு எதிரிகள் என்னை அடித்தார்கள். எதிரி முத்துக்குமார் காலை 6 மணிக்கே தண்ணீர் பாய்ச்ச சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அன்று காலை முத்துக்குமாரின் சத்தம் அ.சா.1-ன் வீட்டு முன்பு கேட்டது. சம்பவத்தின்போது நிறை நபர்கள் வந்து வேடிக்கை பார்த்தார்கள். சம்பவத்திற்கு பின்னிட்டு சம்பவ இடம் வந்த போலீசார் என்னை விசாரித்தனர். நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும், பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 42 /2017

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | :Murugan | Father/Husband Name: Rasu | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.06.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது நரசிங்கம்பட்டியில் வசிக்கிறேன். பெயின்டிங் வேலை செய்கிறேன். பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தபோது நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எக்கு தெரியாது. எழுதிய பேப்பரில் நான் கையெழுத்துசெய்தேன். அ.சா.1 எனக்கு அக்கா முறையாகும். எனக்கு முன்பாக போலீசார் வரைபடம் தயார் செய்யவில்லை. அ.சா.1 எனது அக்கா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 42 /2017

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | :Murugan | Father/Husband Name: Poovalingam | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.06.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது நரசிங்கம்பட்டியில் வசிக்கிறேன். ஒயின்சாப்பில் விற்பனையாளராக பணிபுரிகிறேன். பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையதில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் இந்த சாடசியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைபரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

1ம் எதிரி எனக்கு தூரத்து மாமா முறையாகும். மற்ற எதிரிகள் எனக்கு உறவு முறையினர். போலிசார் விசாரணையில் கடந்த 08.02.13ம் தேதி நானும் ராசு மகன் முருன் என்பவரும் சம்பவ இடத்திலிருந்தபோது மேலூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும் ராசு மகன் முருகனும் கையெழுத்து செய்தோம் என்று சொல்லிவிட்டு எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து கையெழுத்து என்னுடையதில்லை என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.